# சீர்காழி நகராட்சி

# 2019–2020–ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## அமைப்பும் ஆட்சியும்

### 1. அமைப்பு

சீர்காழி நகராட்சி 1–10–72 ம் ஆண்டு தமிழ்நாடு அரசு உள்ளாட்சித் துறையினரின் 29–9–72 ம் தேதிய 2086–வது எண் உள்ள அரசாணையின்படி 3ம் நிலை நகராட்சியாக அமைக்கப்பெற்றுள்ளது . பின் 2–8–1979ம் தேதிய 1911–ம் எண் உள்ள அரசாணையின்படி இந்நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாக 1–4–1980 முதல் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

சீர்காழி நகராட்சியில் 49.கைவிளாஞ்சேரி. 50.சீர்காழி. 52.தாடாளன்கோவில் ஆகிய மூன்று வருவாய் கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. இந்நகராட்சி மன்ற வருவாய் எல்லையில் யாதொரு மாறுதலும் இல்லை. இந்நகராட்சியின் பரப்பளவு 13.21 சதுர கிலோ மீட்டர். 1991 ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகர் மன்றத்தின் மக்கள்தொகை 28,959 ஆக உள்ளது. இதில் ஆண்கள் 14760, பெண்கள் 14199 ஆகும். 2011 ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 34880 ஆகும் அதில் ஆண்கள் 17215 பெண்கள் 17663 உள்ளது.

### 2. உறுப்பினர்கள்

அரசாணை எண் 124 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 7–9–2011 ன்படி நகர் மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 24 ஆக நிர்ணயித்தும் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கான நேரடி தேர்தல் 19–10–2011 ல் நடத்தப்பட்டது. புதியதாக நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 25–10–2011 அன்று பதவி ஏற்றனர். ஆனால் 2018–2019–ம் நிதியாண்டில் தமிழக அரசால் தனி அலுவலர் பதவி ஏற்படுத்தப்பட்டு ஆணையர் அவர்களே தனி அலுவலராகவும் பணி பார்த்து நகர்மன்றத் தீர்மானங்களை நிறைவேற்றும் அதிகாரம் கொண்டவராக செயல்படுகிறார்.

## தனி அலுவலர் மற்றும் ஆணையர்

01.04.2019 முதல் 09.10.2019 முடிய திருமதி மு.அஜிதாபர்வின், ஆணையர் அவர்களும் 10.10.2019 முதல் 06.11.2019 வரை திரு கே.மெய்பொருள், நகராட்சி பொறியாளர் ஆணையர் (பொ) அவர்களுக்கும் 07.11.2019 முதல் 13.03.2020 வரை திரு எஸ்.வசந்தன், நகராட்சி பொறியாளர், ஆணையர் (பொ) அவர்களும் 14.03.2020 முதல் 31.03.2020 வரை திருமதி பெ.தமிழ்செல்வி, சீர்காழி நகராட்சி ஆணையராக பதவி வகித்து வந்தார்.

## கூட்டங்கள்

மன்றத்தில் இயல்புக்கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் தனி அலுவலரால் நடைபெற்று வந்துள்ளது, மற்றபடி வேண்டும் போது இடையிடையேயும் அவசரக்கூட்டங்களும் நடந்தது அறிக்கை ஆண்டில் கூட்டங்கள் நடைபெற்றுள்ளது.

| . | கூட்டங்கள் | முடிவு செய்த பொருட்கள் |
|---|---|---|
| சாதாரணக்கூட்டங்கள் | 10 | 109 |
| அவசரக்கூட்டங்கள் | 5 | 52 |
| சிறப்புக் கூட்டங்கள் | – | – |

## தனி அலுவலரால் மன்றம் முடிவு செய்த பொருள்கள்

அறிக்கை ஆண்டில் பொருள்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன, சென்ற ஆண்டில் பொருள்கள் முடிவு செய்யப்பட்டுள்ளது, பொருள்கள் ஏதும் தள்ளி வைக்கப்படவில்லை தமிழ்நாடு அரசின் ஒழுங்கு விதிகளின்படி நடைமுறைக்கூட்டங்கள் தனி அலுவலரால் வழுவாமல் கடைபிடிக்கப்படுகின்றது.

## குழுக்கள்

திருத்தப்பட்ட 1920 ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 73–இன் கீழ் நியமனக்குழுவும் மற்றும் ஒப்பந்தக்குழுவும் அமைக்கப்பட்டு மன்றத்தலைவர் குழுவின் தலைவராக இருந்து செயல்பட்டு வருகிறார்கள்.

## நிர்வாகம்

வருவாய் நிதி பணிபுரியும் அலுவலக பணியாளர்களுக்கு அறிக்கை ஆண்டில் சம்பளம் ரூ. 453.10 லட்சம் வழுங்கப்பட்டுள்ளது. குடிநீர் பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அறிக்கை ஆண்டில் 109.51 லட்சம் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் வருவாய் நிதியிலிருந்து ரூ.222.82 லட்சமும் குடிநீர் பணி பிரிவு பணியாளர்களுக்கு ரூ1373 லட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது. நகர்மன்ற நிதியிலிருந்து ஊழியர்கள் மாநாடு போன்றவைகளுக்கு பணம் ஏதும் செலவிடப்படவில்லை. அரசினால் அவ்வபோது அறிவிக்கப்படும் கூ:டுதல் அகவிலைப்படி நிலுவை இல்லாமல் அறிக்கை ஆண்டில் வழங்கப்பட்டது.

## தண்டனை

இவ்வாண்டில் ஊழியர்களுக்கு தண்டனைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

### எழுதுபொருள்கள் மற்றும் படிவங்கள்

எழுதுபொருள்கள் மற்றும் படிவங்கள் செலவு இவ்வாண்டில் ரூ.5,00,000/– ஆகும், சென்ற ஆண்டில் ரூ.3,00,000 /–ம் செலவிடப்பட்டுள்ளது.

### வழக்குகள்

31.03.2020 தேதியில் நீதிமன்றத்தில் பைசல் ஆகாமல் உள்ள. வழக்குகளை விரைவில் முடித்துதர ஏற்பாடுகளை செய்ய நகர்மன்ற வழக்கறிஞர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

## பொறியியல் பிரிவு

அறிக்கை ஆண்டில் நகராட்சி பொறியாளராக 01.04.2019 முதல் 06.11.2019 வரை திரு கே.மெய்பொருள் மற்றும் 07.11.2019 முதல் 13.03.2020 திரு எஸ்.வசந்தன்.அவர்களும் 01.04.2019 முதல் 31.03.2020 வரை திரு கே.பாலசுப்ரமணியன். பொதுப்பணி மேற்பார்வையாளர் பணிபுரிந்து வந்துள்ளார். மேலும் தஞ்சை மண்டல பொறியாளர் அவர்களும் சீர்காழி நகராட்சி பொறியியல் சம்பந்தப்பட்ட பணிகளை மேலாய்வு செய்து வருகிறார்கள்.

### சாலைகள் . பாலங்கள் , கட்டிடங்கள் முதலியன

இந்நகருக்குள் இருக்கும் மயிலாடுதுறை –சிதம்பரம் சாலை. சீர்காழி– திருமுல்லைவாசல் சாலை வரை நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது, இவைகள் நீங்கலாக கீழ்கண்ட விபரப்படியான சாலைகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சாலைகள் யாவும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மனைப்பிரிவு சாலைகளால் சாலைகளின் நீளம் அதிகரித்துள்ளது. பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் முறைப்படி செப்பனிடப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் அறிக்கை ஆண்டில் சாலைகள் பராமரிப்புக்கு ரூ.200.00 இலட்சத்திற்கு அடுத்து அனுப்பப்பட்டுள்ளது. செலவிடப்படுள்ளது. சென்ற ஆண்டில் ரூ.300.00 இலட்சம் ஆகும்.

**<u>சாலைகள்</u>**

| | |
|---|---|
| CC Road | **13.972 km** |
| BT Road | **34.680 km** |
| கம்பி சாலை | **3.674 km** |
| மண்சாலை | **0.077km** |
| கிராவல் சாலை | **0.695km** |

## உபயோகித்த சரளையும் , தகுதியும்

சாலைகள் சிமெண்ட்சாலைகள், தார்சாலைகள் அமையப்பெற்றுள்ளது..

பேரூந்து வண்டி வரிச்சட்டத்தின் படி (Toll compensation) இந்நகராட்சிக்கு மானியம் ஏதும் வழங்கப்படவில்லை.

**பாலங்களும். மதகுகளும் :–**

நகரில் பாலங்களும், மதகுகளும் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது,

**<u>ஓய்வு விடுதிகள் , சத்திரங்கள் , தண்ணீர் பந்தல்கள்</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வழிச்செல்வோர் தங்கும் விடுதி தண்ணீர் பந்தல்கள் ஏதும் இல்லை. ஆனால் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற பணி (**Highways and Rural works** ) துறையினரால் தங்கும் விடுதி ஒன்றும் நகர எல்லைக்குள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## <u>மின் விளக்குகள்</u>

| வ.எண் | விளக்குகள் | 2018–2019 | 2019–2020 |
|---|---|---|---|
| (1) | 150w Soudium vapour Fitting | 336 | 340 |
| (2) | 250w Soudium vapour | 8 | 10 |
| (3) | 150w metal halaide Fitting | 6 | 6 |
| 4) | 400w matel halaide Fitting | 12 | 12 |

| | | | |
|---|---|---|---|
| (5) | 20w LED Fitting | 1172 | 1172 |
| (6) | 40w LED Fitting | 12 | 12 |
| (7) | 60w LED Fitting | 25 | 25 |
| (8) | 90w LED Fitting | 175 | 175 |
| **கூடுதல்** | | **1746** | **1752** |

அறிக்கை ஆண்டில் மின் நுகர்வு கட்டணம் ரூ.57,40,768/– மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது, மின் உபகரணங்கள் மற்றும் மின் விளக்குகள் வில்லை மின் பணியாளர்களின் ஊதியம் (தனியார் மயம் உட்பட) ரூ.1860000/– ம் செலவினம் ஏற்பட்டுள்ளது.

பொது மக்கள் நேரத்தை அறிந்துகொள்ள வசதியாக காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சங்கு நாள்தோறும் ஐந்து முறைகள் காலை 5 மணி , 9 மணி ,1மணி ,. 2 மணி மற்றும் இரவு 9 மணி ஆகிய நேரங்களில் ஒளிக்கப்பட்டு வருகிறது. இந்துக்களின் வசதிக்காக மார்கழி மாதத்திலும். முஸ்லீம்களின் வசதிக்காக ரம்ஜான் மாதத்தில் காலையிலும். மாலையிலும் சங்கு ஒலிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு தெரு விளக்கு கணக்கில் ரூ.25,00,000/– செலவு செய்யப்பட்டு உள்ளது, சென்ற ஆண்டு செலவு ரூ.19,44,500/– ஆகும்.

## சீர்காழி நகராட்சி

## 2019–2020 – திட்டப்பணிகள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | TURIP 2019-20 | 200.00 |
| 2 | SDRF வறட்சி நிவாரண நிதி | 46.00 |
| 3 | MLA FUND | 7.00 |

**2019–2020**

**ஆரம்பக்கல்வி – கல்வி வசதிகள்**

| | | |
|---|---|---|
| நகர்மன்ற எல்லையில் உள்ள மேல்நிலைப்பள்ளிகள் (தனியார்) | ,,,, | 5 |
| நகராட்சி மேல்நிலைப்பள்ளிகள் | ,,,,, | 1 |
| தனியார் உயர்நிலைப்பள்ளிகள் | ,,,,, | 1 |
| நகராட்சி தொடக்கப்பள்ளி, | ,,,,, | 7 |
| நகராட்சி நடுநிலைப்பள்ளி | ,,,,, | 2 |
| தனியார் தொடக்கப்பள்ளி | ,,,,, | 9 |
| தனியார் நடுநிலைப்பள்ளிகள், | ,,,,, | 4 |
| மெட்ரிகுலேஷன் பள்ளிகள் (மேல்நிலைப்பள்ளிகள்) (தனியார்) | ,,,,, | 2 |

நகராட்சி எல்லைக்குள் தனியார் மேல்நிலைப்பள்ளி ஒன்று பெண்களுக்காக மட்டுமே செயல்பட்டு வருகிறது, ஏனைய இரண்டும் இருபாலருக்குமானவை,

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த 10 பள்ளிகளும் 1–4–90 முதல் அரசு கல்வி துறையின் கீழ் மாற்றம் செய்யப்பட்டு அதன்படி செயல்பட்டு வருகிறது,

## இட வசதியும் – தளவாடங்கள்

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த 10 பள்ளிக்கூடங்களில் 9 பள்ளிக்கூடங்கள் மட்டும் நகராட்சியில் சொந்தக்கட்டிடத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. தாடாளன் முஸ்லீம் தெரு பள்ளி மட்டும் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு மாத வாடகையாக ரூ.9800/–ம் மின்கட்டணமும் நகராட்சியினால் வழங்கப்படுகிறது. நகராட்சி பள்ளி கட்டிட பராமரிப்புகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மாண்புமிகு புரட்சி த்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம்

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் அறிக்கை ஆண்டிலும் அமுலாக்கப்பட்டு தொடர்ந்து மாண, மாணவிகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

2 வயது முதல் 4 வயதிலான குழந்தைகள் சத்துணவுத்திட்டம் கும்பகோணம் ஊட்டச்சத்து மையத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது,

5+10 பள்ளி சத்துணவு திட்டத்திற்கு 4 பள்ளி சத்துணவு அமைப்பாளர்களும். 7 சமையலர். 7 உதவியாளர்கள் என அமர்த்தப்பட்டுள்ளனர், மேற்படி பணி இடங்களில் சமையலர் பணியிடம் காலியாக உள்ளது. உதவியாளர் பணியிடம் ஒன்றும் உள்ளது, தமிழ்நாடு அரசு சத்துணவு ( பள்ளி சத்துணவு மையங்களில் வேலைநாட்களில் 691 குழந்தைகளுக்கும் விடுமுறை நாட்களில் 325 குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது )

## ஆரம்ப கல்வி நிதி

சொத்துக்களின் மீது விதிக்கப்படும் சொத்துவரி ஆண்டு வாடகை மதிப்பின் பேரில் அரை ஆண்டிற்கு 2.5% கல்வி வரி வசூலித்து வரப்படுகிறது, கல்வி வரி மூலம் கிடைத்த வருமானம் ரூ.37,37,742/– ஆகும். அறிக்கை ஆண்டில் வழங்கப்பட்ட மான்யம் எதும் இல்லை. சென்ற ஆண்டில் கல்வி வரி மூலம் ரூ.37,36,578 /– வசூலிக்கப்பட்டுள்ளது.

## உயர்தர கல்வி

இந்நகராட்சியால் உயர்நிலைப்பள்ளி ஒன்று தற்போது தரம் உயர்த்தப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்குறிப்பிட்டுள்ள தனியார் பள்ளிகள் போதுமானதாக உள்ளது.

1, எல்.எம்.சி மேல்நிலைப்பள்ளி

2, சியாமளா பெண்கள் மேல்நிலைப்பள்ளி ,

3, சபாநாயகர் முதலியார் மேல்நிலைப்பள்ளி,

4, கிருஷ்ணமூர்த்தி முதலியார் நினைவு உயர்நிலைப்பள்ளி,

5, பெஸ்ட் மெட்ரிக்குலேஷன் மேனிலைப்பள்ளி

6, விவேகானந்தா மெட்ரிக்குலேஷன் மேனிலைப்பள்ளி

## கல்லூரி கல்வி –

இந்நகராட்சியில் பகுதியில் கீழ்குறிப்பிட்டுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அறிக்கை ஆண்டில் இயங்குகின்றன

1. பெஸ்ட் கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரி

2. விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரி

அரசு இசை கல்லூரி ஒன்று இந்நகராட்சியில் இயங்கி வருகிறது

**2019–2020 சீர்காழி நகராட்சி எல்லைக்குள் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை**

| பள்ளியின் பெயர் | ஆரம்பப் பள்ளி | | | நடுநிலைப்பள்ளி | | | உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1.தாடாளன் முஸ்லீம் பள்ளி | 5 | 5 | 10 | – | – | – | – | – | – |
| 2. தாடாளன் மேற்கு பள்ளி | 14 | 14 | 28 | – | – | – | – | – | – |
| 3. ஊழியக்காரன் தோப்புபள்ளி | 18 | 40 | 77 | 27 | 32 | 59 | – | – | – |
| 4. பனங்காட்டான்குடி சாலைப்பள்ளி | 6 | 14 | – | 30 | 29 | 93 | – | – | – |
| 5. பனமங்கலம் பள்ளி | 17 | 14 | 31 | – | – | – | – | – | – |
| 6. கோவில்பத்து பள்ளி | 30 | 32 | 62 | – | – | – | – | – | – |
| 7. துறையூர் பள்ளி | 7 | 9 | 16 | – | – | – | – | – | – |
| 8.புளிச்சக்காடுபள்ளி | 11 | 5 | 16 | – | – | – | – | – | – |
| 9.சீர்காழி நகரம் நடுநிலைப்பள்ளி | 6 | 25 | 31 | – | – | – | 254 | 406 | 660 |
| 10. இராதா கிருஷ்ணன் துவக்கப்பள்ளி | 17 | 12 | 29 | – | – | – | – | – | – |
| 11.சபாநாயக முதலியார் இந்து துவக்கப்பள்ளி | 257 | 217 | 474 | – | – | – | – | – | – |
| 12.T.S.M.பள்ளி | 89 | 61 | 150 | – | – | – | – | – | – |
| 13.வாணி விலாஸ் பள்ளி | 281 | 276 | 557 | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14. இந்து துவக்கப்பள்ளி | **46** | **43** | **39** | | | | | | |
| 15.சபாநாயக முதலியார் இந்து நடுநிலைப்பள்ளி | | | | **141** | **90** | **231** | | | |
| 16.ஞான சம்பந்தர் இந்து நடுநிலைப்பள்ளி | | | | **109** | **109** | **218** | | | |
| 17.சபாநாயக முதலியார் இந்து மேல் நிலைப் பள்ளி | | | | | | | **1896** | **251** | **2147** |
| 18.,எல்.எம்.சி. மேல்நிலைப்பள்ளி | | | | | | | **416** | **388** | **804** |
| 19. சியமளா பெண்கள் மேல் நிலைப்பள்ளி | **--** | | | **–** | | | **–** | **1611** | **1678** |
| 20.பெஸ்ட் மேல் நிலைப்பள்ளி | **497** | **450** | **947** | | | | **583** | **464** | **1047** |
| 21. விவேகானந்தா மேல்நிலைப் பள்ளி | **1654** | **1374** | **3028** | | | | **1264** | **1132** | **2396** |
| 22.கிருஷ்ணமூர்த்தி முதலியார் உயர் நிலைப் பள்ளி | | | | **–** | **–** | **–** | **171** | **180** | **351** |
| 23.சபாநாய முதலியார் மெட்ரிக் பள்ளி | **–** | **–** | **–** | **810** | **759** | **1569** | **–** | **–** | **–** |
| 24.செயின் ஜோசப் மெட்ரிகுலேஷன் பள்ளி | **–** | **–** | **–** | **351** | **310** | **661** | **–** | **–** | **–** |
| 25.சக்தி மெட்ரிக் பள்ளி | **34** | **17** | **51** | **–** | **–** | **–** | **–** | **–** | **–** |
| 26.எழில் மலர் மெட்ரிக்பள்ளி | **–** | **–** | **–** | **146** | **126** | **272** | **–** | **–** | **–** |
| 27) பெஸ்ட் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்<br>1) D.T Ed,<br>2) B.Ed | | | | **5** | **15** | **15** | | | |
| 28) விவேகானந்தர் கலை மற்றும் அறிவியல் கல்லூாி, சீர்காழி | | | | **Iyr<br>354** | **IIyr<br>313** | **IIIyr<br>348** | **1065** | | |

**<u>பொது நூல் நிலையங்களும்., படிப்பங்களும்</u>**

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் மூன்று பூங்காக்களிலும் நகர்மன்றத்தால் இலவச படிப்பகங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட மூன்று படிப்பங்களிலும் தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

**தமிழ் நாளிதழ் :** தினமணி., தினகரன், தினத்தந்தி., தினமலர் , தமிழோசை

மாலைமுரசு, மாலை மலர், தமிழ் முரசு,

மத்திய நூல் நிலையத்தின் கிளை நூலகம் நகரத்தில் இயங்கி வருவதால் தனியார் நூலகம் ஏதும் நடத்தப்படவில்லை.

## நகரமைப்பு பிரிவு

இந்நகராட்சியில் கட்டிட அனுமதி. ஆக்கிரமிப்புகள் மனைப்பிரிவு பணிகள் நகரமைப்பு ஆய்வர் ஒருவரால் பார்க்கப்படுகிறது, அறிக்கை ஆண்டில் திரு ஜி. ரவிச்சந்திரன் சீர்காழி நகராட்சி நகரமைப்பு ஆய்வர் பணியினை வகித்து வருகிறார். அறிக்கையாண்டில் கட்டிட அனுமதிக்கோரி **56** மனுக்கள் வரப்பெற்றது **50** மனுக்கள் அனுமதி அளிக்கப்பட்டது, **6** மனுக்கள் நிராகரிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் கடைத்தெரு. சாலை ஓரங்கள் ஆகிய இடங்களிலுள்ள ஆக்கிரமிப்புகள் **152**எண்ணிக்கைகள் அகற்றப்பட்டது.

## பொது சுகாதாரம் – மருத்துவ சிகிச்சை

நகர்மன்றத்தால் மருத்துவமனை ஏதும் நடத்தப்படவில்லை, அரசால் நடத்தப்படும் மருத்துவமனை மற்றும் தேசிய ஊரக சுகாதார திட்டத்தின் கீழ் அரசால் நடத்தப்படும் நகர்புற சுகாதார நிலையம் ஆகியவை இந்நகரில் உள்ளன. திரு எஸ். நாட்ராயன், துப்புரவு அலுவலராக **01.04.2019** முதல் அறிக்கை ஆண்டு முடிய பணியாற்றி வந்துள்ளார்.

## தாய்சேய் நலமும். பிறப்பு விகிதமும்

அறிக்கை ஆண்டில் நகராட்சியில் தடுப்பூசி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு புதன் கிழமையும் குழந்தைகளுக்கு மற்றும் கர்பிணி தாய்மார்களுக்கு தடுப்பூசி அரசு மருத்துவமனை மற்றும் ஈசானிய தெருவில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றிலும் போடப்பட்டுள்ளது.

| வ. எண் | | 2008–2009 | 2009–2010 | 2010–2011 | 2011–2012 | 2012–2013 | 2013–2014 | 2014 – 2015 | 2015 – 2016 | 2016–2017 | 2017–2018 | 2018 – 2019 | 2018 – 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கர்ப்பிணி தாய்மார்களுக்கு தடுப்பூசி போடப்பட்ட விபரம் | 1704 | 1480 | 1514 | 1617 | 1617 | 1617 | 1697 | 1684 | 1702 | 1726 | 1712 | 656 |
| 2 | குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழுங்கியது | 2021 | 3716 | 3670 | 3818 | 3818 | 3818 | 3987 | 3976 | 3842 | 3836 | 3856 | 3556 |
| 3 | காசநோய் தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் | 1135 | 1065 | 1670 | 1737 | 1737 | 1737 | 1791 | 1786 | 1806 | 1812 | 1814 | 306 |
| 4 | தடுப்பூசி (தட்டம்மை) போடப்பட்ட குழந்தைகள் | 416 | 570 | 661 | 732 | 732 | 732 | 1674 | 1621 | 1686 | 1674 | 1692 | 302 |
| 5 | முத்தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் | 2021 | 2557 | 3231 | 3432 | 3432 | 3432 | 1642 | 1743 | 1721 | 1746 | 1784 | 1225 |

**<u>இறப்பு விகிதம்</u>**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி எல்லைக்குள் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 237ஆகும். சென்ற ஆண்டு 275 அறிக்கை ஆண்டில் மக்கள் தொகையில் இறப்பு 6% (1000) சதவிகிதம் ஆகும் கடந்த ஆண்டு 7% ஆகும்.

**<u>பெரியம்மை</u>**

பெரியம்மை ஒழிப்பு முழுமையாக ஒழிக்கப்பட்டு விட்டதால். அம்மை நோய் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்படவில்லை, பிறப்பு இறப்பு பதிவு செய்ய தகுதி வாய்ந்த பயிற்சி பெற்ற துப்புரவு ஆய்வர் நகராட்சியில் பணிபுரிந்து வருகிறார்.

**<u>வாந்திபேதி</u>**

இவ்வாண்டு வாந்திபேதியினால் இறந்தவர் யாரும் இல்லை

**<u>பிளேக்</u>** நகரில் இந்த வியாதியால் இறந்தவர் யாரும் இல்லை.

**<u>என்டிரிக் காய்ச்சல்</u>** இல்லை

**<u>மலேரியா காய்ச்சல்</u>** மலேரியா காய்ச்சலினால் இறந்தவர் யாரும் இல்லை

மற்ற காய்ச்சலினால் இறந்தவர் யாரும் இல்லை

**<u>மலேரியாவும் . கொசுத்தடுப்பும்</u>**

இத்திட்டம் நீண்ட காலமாக செயல்பட்டு வருகிறது, கொசு தடுப்பு மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது, கொசுப்புகை மருந்தும் அடிக்கப்பட்டு வருகிறது, மேற்கண்ட இத்திட்டத்திற்கு அறிக்கையாண்டில் ரூ.14,50,000/– செலவு செய்யப்பட்டுள்ளது, சென்ற ஆண்டு செலவு ரூ.8,20,000/– செலவு செய்யப்பட்டுள்ளது.

**<u>இடுகாடுகளும். சுடுகாடுகளும்</u>**

நகரில் 15 இடுகாடுகளும். சுடுகாடுகளும் உள்ளன, இவை அனைத்தும் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது நேரு வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் சுடுகாடுகளுக்கு சாலைகள் மற்றும் கூரைகள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. ஈசானிய தெருவில் நவீன எரியூட்டும் சுடுகாடு அமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

## சலவைத் தொழிலாளர்களுக்குரிய சலவைத்துறை வசதி

சலவைத் தொழிலாளர் நலனை முன்னிட்டு ஈசான்யத்தோப்பு தெருவில் இந்நகராட்சியால் சலவைத்துறை ஒன்று கட்டப்பட்டு அறிக்கை ஆண்டிலும் பராமரிக்கப்பட்டு வருகிறது, அப்பகுதியில் உள்ள 10 சலவைத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

## சுகாதாரம்

அறிக்கை ஆண்டில் பணி புரிந்துள்ள துப்புரவு பிரிவு பணியாளர்கள் விவரம் வருமாறு,

1, துப்புரவு அலுவலர் – 1 ( காலியிடம் 1)
2, துப்புரவு ஆய்வர் – 2 ( காலியிடம் –1)
3, களப்பணி உதவியாளர் – 1 ( காலியிடம் )
4, சுகாதார மேற்பார்வையாளர்கள் – 3
5, ஓட்டுநர்கள் – 3 ( காலியிடம் –1)
6, துப்புரவு செய்பவர்கள் – 78 (காலியிடம் 46)

## அபாயகரமானதும். அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்

1920ம் வருடத்திய சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 249, 250வது பிரிவுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 1969–ம் வருடத்திய உணவு கலப்பட தடைச்சட்டத்தின் படி உணவுப்பொருள்கள் விற்பனைக்கு உரிமங்கள் வழங்கப்படுகின்றன. ஊரிமையாணையின்றி தொழில் நடத்தப்படுவதை தடுப்பததற்கு அவ்வப்போது தக்க நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் 380 இனங்களுக்கு உரிமையாணைகள் வழங்கப்பட்டுள்ளன. அறிக்கை ஆண்டில் இந்த ஆண்டில் வருமானம் ரூ.1,18,216/– சென்ற ஆண்டு வருமானம் ரூ.1,34,000/– ஆகும். நகராட்சி எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட தொழிற்கூடங்கள் ஏதுமில்லை.

## திருவிழாக்கள்

தருமபுர ஆதினத்துக்கு சொந்தமான அருள்மிகு சட்டநாதர் கோவிலில் எழுந்தருளியிருக்கும் திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் உற்சவம் நடைபெற்றது, இந்த திருவிழாவில் சுமார் 25,000 பேர் கூடினர். வழக்கம் போல் கோவிலுக்கு முன்னதாக பந்தல் அமைக்கப்பட்டது, தனியாக சிப்பந்திகளும். நவீன கழிப்பறை வசதியும். சிறுநீர் கழிப்பிட வசதியும் அமைக்கப்பட்டன, போதிய சுகாதார வசதிகள். குடிநீர் வசதிகள் செய்யப்பட்டன.

## குடிநீர் விநியோகம்

அறிக்கையாண்டில் நகரில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வழங்குவதற்கு 149 கைப்பம்புகள் ஆழ்குழாய் கிணறுகள் – 7 இதைத் தவிர சிறுமின்விசை பம்புகள் 31, ஆகியவைகள் இயங்கி வருகிறன்றன. பொதுமக்களுக்கு குடிநீர்விநியோகம் சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பம்பிங் மூலம் பகிர்மான குழாய்கள் வழியாக தினசரி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது, மேற்படி 5 மேல்நிலை தொட்டிகள் மூலமும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கைப்பம்புகளை பராமரிக்கவும் பிரஷர் பம்புகளை சரிபார்க்கவும். ஒரு பம்பு மெக்கானிக் அவருக்கு உதவியாக 2 குடிநீர் பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். தற்பொழுது உதவி பம்பு மெக்கானிக் பணியிடம் காலியாக இருக்கிறது, குடிநீர் விநியோகம் செய்யும் பணியை நகராட்சி பொறியாளர் கண்காணித்து வருகிறார். அறிக்கை ஆண்டில் மின்கட்டணம் செலுத்தியது. உபகரணங்கள் வாங்கியது பணியாளர்கள் சம்பளம் ( 1 ஒப்பந்த பணியாளர்கள் உட்பட ) ரூ.25,21,450/– ஆகும்.

சித்தமல்லி குடிநீர் நீரேற்று தலைமை பணிமனையில் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிக்கு தனியார் மயமாக்குதல் திட்டத்தின்கீழ் ஒப்பந்த பணி அடிப்படையில் மின்கம்பியாளர் 4 II Grade Electrician பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குடிநீர் விநியோக திட்டத்தின்கீழ் அறிக்கை ஆண்டில் கீழ்குறிபிட்டுள்ளபடி செலவினம் ஏற்பட்டுள்ளது.

## செலவு விபரம்

| | | |
|---|---|---|
| 1 | பணியாளர்கள் ஊதியம் | –– |
| 2 | மின் நுகர்வு கட்டணம் | 536450 |
| 3 | டீசல் மற்றும் இதர செலவு | ––– |
| 4 | பராமரிப்பு பணிக்கு உபகரணங்கள் வாங்கியது | ––– |
| 5 | தனியார் மயமாக்கும் பணியில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் நபர்களுக்கு கூலி வழங்கியது | 585000 |
| 6 | டெலிபோன் செலவு | ––– |
| 7 | விளம்பரசெலவு | ––– |
| 8 | பராமரிப்பு செலவு | 300000 |
| 9 | பம்பு பராமரிப்பு செலவு | ––– |
| | **மொத்தம்** | **1421450** |

## மழை நீர் வடிகால்

இந்நகரில் திறந்த கட்டிட வடிகால்களோ அல்லது பாதாள சாக்கடைத் திட்டமோ இல்லை. திறந்தவெளி சாக்கடைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் சில இடங்களில் உள்ளது, இவைகளில் சாக்கடை நீரை தேங்காமல் அவ்வப்போது பொதுசுகாதாரப்பணியாளர்களால் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இவைகளில்லாமல் தொட்டிகளில் நிரம்பியுள்ள சாக்கடை நீரை மினி டேங்கர் மூலம் அப்புறப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

## மழை நீர் வடிகால்

மழை நீர் வடிகால் மொத்த நீளம் **12.800 கி.மீ.**

## குடிநீர் வினியோகம்

| | | | |
|---|---|---|---|
| நீர் ஆதாரம் | கொள்ளிடம் ஆறு சித்தமல்லி கிராமம் | | |
| மேல் நிலை தொட்டிகள்<br>அலுவலக வளாகம் பகுதி | **12.00** லட்சம் லிட்டர்கள் கொள்ளளவு | – | **1** |
| கோவில்பத்து பகுதி | **0.30** ஆயிரம் லிட்டர்கள் | – | **1** |
| பனமங்கலம் பகுதி | **0.30** ஆயிரம் லிட்டர்கள் | – | **1** |
| துறையூர் பகுதி | **0.30** ஆயிரம் லிட்டர்கள் | – | **1** |
| வ.ஊ.சி நகர் | **2.00** லட்சம் லிட்டர்கள் | – | **1** |

| | |
|---|---|
| தினசரி வழங்கும் குடிநீர் அளவு | 2.10 MLD / 60 LPCD |
| குடிநீர் வழங்குதல் விபரம் | தினசரி ஒரு வேளை |
| பகிர்மான குழாய் நீளம் | **67** கி.மீட்டர் |
| குடிநீர் பிரதானக் குழாய் நீளம் | **16.245** கி.மீட்டர்கள் |
| குடிநீர் குழாய் இணைப்பு | **1614** எண்ணிக்கைகள் |
| பொது குழாய்கள் | **66** எண்ணிக்கைகள் |
| கைப்பம்புகள் (பிள்டர் பாயின்ட்) | **149** எண்ணிக்கைகள் |
| சிறுமின்விசை பம்புகள் | **31** எண்ணிக்கைகள் |

இந்த நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 74 லிட்டர்கள் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் சீராகவும் முறையாகவும் செயல்பட்டு வருவதால் குடிநீர் தட்டுப்பாடு பிரச்சனைகள் ஏதுமில்லை.

| | | |
|---|---|---|
| **<u>வாகனங்கள் ஈப்பு</u>** | : | 1 |
| குடிநீர் மினி டேங்கர் லாரி | : | 1 (இல்லை) |
| குப்பை அள்ளும் லாரி | : | 3 ( 1 பழுதடைந்துள்ளது) |
| கழிவுநீர் அகற்றும் லாரி | : | 1 ( 4000 லிட்டர்) ( பழுதடைந்துள்ளது) |

**<u>நகராட்சி சொத்துக்கள்</u>**

| | | |
|---|---|---|
| அலுவலக கட்டிடம் | : | 1 |
| நகர்மன்ற கூடம் | : | 1 |
| சிட்டி யூனியன் வங்கி | : | 1 தரைதளம் |
| பி.எஸ்.என்.எல். | : | 1 முதல் தளம் |
| சுகாதார வளாகம் | : | 2 |
| பூங்கா | : | 3 |
| மயானம் | : | 15 |
| மின் மயானம் | : | 1 |
| பலன்தரும் மரங்கள் | : | 140 |
| கடைகள் | : | 103 |
| வருடாந்திர ஏலகடைகள் | : | 15 |
| சாலைகளின் நீளம் | : | 53.098 கி.மீ |

## <u>பள்ளி கட்டிடங்கள்</u>

நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகள் .. 10 எண்ணிக்கை

ஒன்பது பள்ளிகள் நகராட்சி சொந்தமான கட்டிடத்திலும் ஒரு பள்ளி தனியார் கட்டிடத்திலும் இயங்கி வருகிறது.

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள பள்ளிக் கட்டிடங்கள் அனைத்திலும் கீற்றுக்கொட்டகை மற்றும் எளிதில் தீப்பிடிக்கக்கூடிய கூறைகள் ஏதும் இல்லை.

**<u>பணியாளர்கள் விபரம்</u>**

**<u>பொதுப்பிரிவு</u>**

| | | |
|---|---|---|
| மேலாளர் | | 1 |
| கணக்கர் | | 1 |
| உதவியாளர் | | 1 |
| உதவி கணினி திட்ட அமைப்பாளர் | | 1 |
| இளநிலை உதவியாளர் | | 7 |
| தட்டச்சர் | | 1 |
| பதிவறை எழுத்தர் | | 1 |
| அலுவலக உதவியாளர் | | 2 |
| காவலர் | | 1 (காலியிடம் 1) |
| **<u>பொறியியல் பிரிவு</u>** | | |
| பொறியாளர் | | 1 |
| பணி மேற்பார்வையாளர் | | 1 |
| ஓட்டுநர் | | 1 |
| பூங்கா காவலர்கள் | | 2 ( காலியிடம் 2 ) |
| **<u>தெரு விளக்குப் பராமரிப்பு</u>** | | |
| மின் கம்பியாளர் | | 2 ( காலியிடம் 1) |
| மின் கம்பி உதவியாளர் | | 2 ( காலியிடம் 2 ) |
| **குடிநீர் விநியோகம்**<br>பம்பு மெக்கானிக் | | 1 |
| உதவி பம்பு மெக்கானிக் | | 1 (காலியிடம் 1 ) |
| குடிநீர் திட்ட காவலர் | | 1 |
| குடிநீர் விநியோக கிளினர் | | 2 |
| **<u>வருவாய் பிரிவு</u>** | | |
| வருவாய் ஆய்வர் | | 1 |
| வருவாய் உதவியாளர் | | 7 |

| | | |
|---|---|---|
| **நகரமைப்பு பிரிவு** | | |
| நகரமைப்பு ஆய்வாளர் | | 1 (காலியிடம் 1) |
| சங்கிலியாளர் | | 1 |
| **பொது சுகாதாரப் பிரிவு** | | |
| துப்புரவு அலுவலர் | | 1 (காலியிடம் 1) |
| துப்புரவு ஆய்வர் | | 2 ( காலியிடம் 1 ) |
| சுகாதார மேற்பார்வையாளர் | | 5 ( காலியிடம் 3) |
| களப்பணியாளர் | | 1 |
| ஓட்டுநர் | | 3 (காலியிடம் 1) |
| துப்புரவு பணியாளர்கள் | | 72 (காலியிடம் 42 ) |
| சமுதாய அமைப்பாளர் | | 1 |
| **சத்துணவு** | | |
| உதவியாளர் மற்றும் கணக்கர் | | 1 |
| சத்துணவு அமைப்பாளர் | | 9 (காலியிடம் 7 ) |
| சத்துணவு சமையலர் | | 9 (காலியிடம் 3) |
| சத்துணவு உதவியாளர் | | 9 (காலியிடம் 3) |

## திடக்கழிவு மேலாண்மை திட்டம்

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் துப்புரவு அலுவலர் –1 துப்பரவு ஆய்வாளர் –1, துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் – 3, வாகன ஓட்டுனர்கள்–3, துப்புரவு பணியாளர்கள் –32, ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் – 69 ஆகியோர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

01.08.2004 முதல் இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 24 வார்டுகளில் திடக்கழிவுகள் அகற்றும் பணி தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தினசரி சேகரம் ஆகும் திடக்கழிவு 14MT மெட்ரிக் டன் ஆகும். திடக்கழிவு மேலாண்மை விதி 2016–ன் கீழ் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டம் விரிவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நகராட்சிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து மக்கம் குப்பை, மக்காத குப்பை என துப்புரவு பணியாளர்களைக் கொண்டு பிரித்து வாங்கப்படுகிறது. மக்கும் குப்பைகளை உரமாக தயாரிக்க ஏதுவாக ஈசானியத் தெரு நுண்ணுயிர் உர மையம் மற்றும் தென்பாதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சுடுகாட்டு பகுதியில் நுண் உர மையம் ஆகியன தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு இடங்களில் தென்பாதியில் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் பணிக்கான நுண்ணுயிர் உரக்கிடங்கு 76 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு உள்ளது.

மேலும் ஈசானியத் தெரு கலவை உரத்திடலில் உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தயாரிக்கப்படும் உரங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 6 MT உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மக்காத குப்பையில் இருந்து மறு சுழறச்சிக்கு பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடி பாட்டில் மற்றும் இதர பொருட்கள் வாரந்தோறும் விற்பனை செய்யப்பட்டு அதற்கான தொகையை துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. மறுசுழற்ச்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் பொருட்களை அரியலுரில் உள்ள Altra Tech சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்படுகிறது.

## துாய்மை இந்தியா திட்டம்:

துாய்மை இந்தியா திட்டம் நகராட்சி பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டம், தனிநபர் இல்ல கழிவறை கட்டும் திட்டம் ஆகியன செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் 6 பரப்புரையாளர்கள் மற்றும் 1 மேற்பார்வையாளர் என மொத்தம் 7 பேர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். நகர மக்களிடையே குப்பைகளை பிரித்து வாங்குதல், கழிவறையை பயன்படுத்துதல் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் நலக்கல்வி வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர்.

துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் இல்ல கழிவறை கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொத்தம் 1464 வீடுகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு பணி நடைபெற்று முடிவடைந்துள்ளது. இந்த ஆண்டு 1464 வீடுகளுக்கு கழிவறை கட்டப்பட்டு மானிய தொகையாக ரூ.117.12 லட்சம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது.

## பிளாஸ்டிக் ஒழிப்பு திட்டம்:

பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதி 2016–ன்படி துணை விதிகள் இயற்றப்பட்டது. 28.08.2017 முதல் நகராட்சிகளில் அமுலில் உள்ளது. அதன்படி நகரில் பிளாஸ்டிக் பைகள் உபயோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது. நகரில் உள்ள வணிக நிறுவனங்களில் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றது.

## பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குதல்

பொதுசுகாதாரப்பிரிவில் பிறப்பு, இறப்பு பதிவாளரால் பிறப்பு, இறப்பு பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 338 பிறப்புகளும், 237 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சியில் பதிவு செய்யப்படும் பிறப்பு, இறப்பு

சான்றிதழ்களை இணையதளத்தில் பொதுமக்கள் பதிவிறக்கம் செய்யும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

## <u>மின்னணு ஆளுமை</u>

நகராட்சிகளின் நிர்வாகத்தை மேம்படுத்தும் பொருட்டு. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் III–ன் கீழ் இந்நகராட்சிக்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் மூலம்

1, பிறப்பு. இறப்பு பதிவுகள்

2, சொத்து வரி

3, குடிநீர் கட்டணம்

4, தொழில் வரி

5, புதிய கணக்கு முறை

6, அசையும் மற்றும் அசையா சொத்துகள்

7, கட்டிட அனுமதி வழங்குதல்

8, அச்சம் மற்றும் அருவருக்கதக்க உரிமம் வழங்குதல்

9, வாகனங்கள்

10, இருப்புகள்

11, வரியில்லா இனங்கள்

12, திடக்கழிவு மேலாண்மை

13, பணியாளர் மேலாண்மை

ஆகியவை கணினி மயமாக்கப்பட்டுள்ளன, சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவை 01–08–2003–ல் தொழில் வரி மற்றும் வரியில்லா இனம். 1–4–2004 –இல் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

## மின் ஆளுமை (e-governance)

### தொடுதிரை (Touch Screen)

இந்நகராட்சி அலுவலகத்தின் கணினி வசூல் மையத்தில் தொடுதிரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் வரிவரிப்புதாரர்கள் தாங்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி. குடிநீர் கட்டண பாக்கி. வரியில்லா இனங்கள் பாக்கி. தொழில் வரி பாக்கி போன்ற தகவல்களை தாங்களாகவே அறிந்து கொள்ள இயலும், மேலும் பொதுமக்கள் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விவரங்களை ஆங்கிலம். தமிழில் அறிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது,

### இ–சேவை மையம்

இந்நகராட்சியில் முற்றிலும் கணினி மயமாக்கப்பட்ட ஓர் இ–சேவை மையம் உள்ளது, இதனமூலம் பொதுமக்கள் தாங்கள் நேரிடையாக வந்து சொத்துவரி. குடிநீர் கட்டணம். தொழில் வரி. மற்றும் வரியில்லா இனங்கள் போன்றவற்றை உடனுக்குடன் செலுத்தி கணினி மயமாக்கப்பட்ட ரசீது பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது,

### நகராட்சி கணினி கருவூலம்

மின் ஆளுமை திறனை பயன்படுத்தி பலதரப்பட்ட வருவாய் இனங்களை நகராட்சி கருவுலத்தில் செலுத்துவதற்கு ஏதுவாக கணினி மயமாக்கப்பட்ட கருவூலம் அமைக்கப்பட்டுள்ளது, இதன்மூலம் பிறப்பு. இறப்பு மற்றும் நகராட்சி பலதரப்பட்ட வருவாய் இனங்கள் செலுத்தி உடனுக்குடன் கணினி ரசீது பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது, மின்னனு வசூல் மையம் வசூல் வசதி காரணமாக பொதுமக்கள் தாங்கள் நகராட்சியில் செலுத்தக்கின்ற பணத்திற்கு உடனுக்குடன் கணினி மயமாக்கப்பட்ட ரசீது வழங்கப்படுகிறது,

### இன்டர்நெட் வசதி

இந்த உலகத்தின் எந்த முனையிலிருந்து பலதரப்பட்ட தகவல்களை இந்நகராட்சி தொடர்பாக பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது, இதன்மூலம் நகராட்சிக்குட்பட்ட நிலுவை வரி. வரியில்லா இனங்களின் தகவல்களை கீழ்கண்ட முகவரியில் இணையதளம் மூலம் தெரிந்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது,

**இணையதள முகவரி https:/tnurbantree.tn.gov.in/sirkali**

பொதுமக்கள் குறைகள் மற்றும் ஆலோசனைகளை தெரிவிக்க மின் ஆளுமை முகவரி

**commr.sirkazhi@tn.gov,in**

## மழைநீர் சேகரம் அமைத்தல்

1) இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்று குளத்திற்கு மழைநீர் சேமிப்பு திட்டம் மற்றும் நீர் தேங்க கூடிய 80 இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு செய்ய ரூ.6.85 லட்சம் மதிப்பீடு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கேட்டு மாவட்ட ஆட்சித்தலைவரிடம் 14.7.2011 அனுப்பப்பட்டு உள்ளது.

2) இந்நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட விபரப்படி மழைநீர் சேகரிப்பு அமைப்பு செய்யப்பட்டு உள்ளது

| | |
|---|---|
| தனியார் வீடுகள் | – |
| வணிக நிறுவனம் | – 1188 |
| தனியார் நிறுவனம் | – 25 |
| குளங்கள் எண்ணிக்கை | – 32 |
| | 1245 |

## பாதாளச்சாக்கடைத் திட்டம்

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயார் செய்து வருகிறது.

## பொது நலமும் . பாதுகாப்பும்

குறிப்பிடத்தக்க விபத்து ஒன்றும் நடக்கவில்லை, இந்நகரில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

## வரவின் முயற்சிகள்

அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. பேருந்து நிலையம் ' பி ' வகுப்பாக உள்ளது, அரசாணை எண் 175 உள் (போக்குவரத்து) துறை நாள் 4.3.2002–ன் படி கட்டணம் உயர்த்தப்பட்டு பேரூந்து ஒன்றுக்கு ரூ 12 வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது

அறிக்கை ஆண்டில் பேருந்து நிலையத்தில் வரும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்வதற்காக ஏலம் விட்டதில் ரூ.453705/– ஏலம் எடுக்கப்பட்டுள்ளது, சென்ற ஆண்டில் ரூ.432100/– ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

**சரக்கு உந்தும் நிலையம்** இல்லை

## போக்குவரத்து

இந்நகராட்சியினால் போக்குவரத்து எதும் நடத்தப்படவில்லை, தனிப்பட்டவர்களாலும். அரசு போக்குவரத்து கழகத்தாலும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

## பொதுவரியினங்கள் வரவு கணக்குகள்

அறிக்கை ஆண்டில் கீழ்குறிப்பிட்டுள்ள வரிவிகிதங்கள் அமுலில் இருந்து வருகிறது, கட்டிடங்களின் ஆண்டு வாடகை மதிப்பின் பேரில் சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது.

1, பொது காரியங்களுக்கு வரி ,,, 8%
2, குடிநீர் வரி மற்றும் வடிகால் வரி 2%
3, கல்வி வரி 2.5%
1
– – – –
13.5%

## தொழில் வரி

1920 ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 124D தொழில் வரி வசூல் செய்யும் விதிகள் 1999 விதி 16–ன்படி இந்நகராட்சியில் தொகை வசூலிக்கப்பட்டு வரும் தொழில் வரியினை 01.10.2018 முதல் ( 2018–2019 இரண்டாம் அரையாண்டு முதல் ) 25 சதவீதம் உயர்வு செய்திட சீர்காழி நகர்மன்ற தீர்மான எண்.221 நாள். 24.05.2018–ன்படி 01.10.2018 முதல் (2018–2019 இரண்டாம் அரையாண்டு முதல் ) பின்வரும் தொழில் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ,எண் பணியாளர்களின் அரையாண்டிற்கான | MCR.No.185/29.08.2008 அரையாண்டு ஆண்டுக்குரிய தொழில் வரி (30.09.2014 முடிய) | MCR.No.468/17.10.2013 அரையாண்டு ஆண்டுக்குரிய தொழில் வரி (01.10.2018 முடிய) |
|---|---|---|
| 1, ரூ.21.000க்குள் | இல்லை | இல்லை |
| 2, ரூ.21.001 முதல் 30.000 வரை | ரூ.100 | ரூ.165 |
| 3, ரூ.30.001 முதல் 45.000 வரை | ரூ.250 | ரூ.410 |
| 4, ரூ.45.001 முதல் 60.000 வரை | ரூ.490 | ரூ.800 |
| 5, ரூ.60.001 முதல் 75.000 வரை | ரூ.735 | ரூ.1195 |
| 6, ரூ. 75.000 க்கு மேல் | ரூ.975 | ரூ.1250 |

## வரி விதிப்புகள் விவரம்

### அறிக்கை ஆண்டில் வரிவிதிப்புகள் விவரம்–

1. சொத்துவரி – 9244
2. தொழில் வரி – 963
3. குடிநீர் இணைப்புகள் – 1506
4. வருவாய் தரதக்க இனங்கள் எண்ணிக்கை

கடைகள் – 183
வருடாந்திர ஏல கடைகள் – 15
பலன் தரும் மரங்கள் – 25

5. அச்சம் மற்றும் அருவருக்கதக்க தொழில்கள் உரிமங்கள் எண்ணிக்கை – 513

## கேட்பு வசூல் பாக்கி

## வரிகள் மற்றும் வரி இல்லா இனங்களின்கேட்பு வசூல் பாக்கி விபரம்

| | | கேட்பு | வசூல் | பாக்கி லட்சத்தில் |
|---|---|---|---|---|
| சொத்துவரி | நிலுவை | 93.99 | 48.08 | 45.91 |
| | நடப்பு | 131.45 | 96.94 | 34.52 |
| | கூடுதல் | 225.44 | 145.02 | 80.43 |
| தொழில் வரி | நிலுவை | 21.35 | 4.52 | 16.82 |
| | நடப்பு | 29.80 | 21.48 | 8.33 |
| | கூடுதல் | 51.15 | 26.00 | 25.15 |
| குடிநீர் கட்டணம் | நிலுவை | 1.44 | 0.47 | 0.97 |
| | நடப்பு | 7.39 | 6.40 | 0.98 |
| | கூடுதல் | 8.83 | 6.87 | 1.96 |
| வரியில்லா இனங்கள் | நிலுவை | 136.89 | 68.86 | 68.03 |
| | நடப்பு | 29.04 | 13.63 | 15.41 |
| | கூடுதல் | 165.93 | 82.50 | 83.44 |

## வண்டிகள் விலங்குகள் வரி

வில் வண்டிகள் . குதிரை வண்டிகள் விலங்குகளின் மீது விதிக்கப்படும் வரி மூலம் வரவு இல்லை, சென்ற ஆண்டும் வரவு இல்லை,

1, கேளிக்கை வரி வரவு ரூ.65,000/–

2, முத்திரை கட்டணம் மீதான மிகுவரி வரவு இல்லை

## நிதி நிலைமை

அறிக்கை ஆண்டில் சாதாரணக்கணக்கில் வரவு ரூ.293.99 லட்சமாகும் ஆகவும் செலவு ரூ.682.06 ஆகவும் உள்ளது . திரண்ட பற்றாக்குறை ரூ.388.07 லட்சமாக உள்ளது.

## தணிக்கை

அறிக்கை ஆண்டில் 2018–2019 ம் ஆண்டுக்கணக்கு தயாரிக்கப்பட்டு மேற்படி ஆண்டு வரை தணிக்கை நடைப்பெற்று வருகிறது

இந்நகராட்சியில் அறிக்கை ஆண்டில் நிலுவையில் உள்ள பொதுக்கணக்கு. ஆரம்பக்கல்வி கணக்கு. சேமநலநிதி கணக்குகளின் தணிக்கை தடைகள் பின்வருமாறு

**2019– 2020 வரை**

| | | |
|---|---|---|
| 1, | பொதுக்கணக்கு | |
| 2, | கல்வி நிதி கணக்கு | 518 |
| 3, | சேமநலநிதி கணக்கு | |
| 4, | திட்ட நிதி | – – – – |
| | மொத்தம் | 518 |

## அரசு கடன் திரும்ப செலுத்திய விவரம்

2019–2020–ஆம் ஆண்டில் இந்த தலைப்பில் தொகை செலுத்தப்பட்ட விபரம் கீழே தரப்பட்டுள்ளது,

**குறிப்பு** அரசிடமிருந்து சாலை வேலைகள் மற்றும் இதர பணிகளுக்கு பெறப்பட்ட கடன்களில் 2019–2020 ம் ஆண்டிற்கு நிலுவை இல்லை.

## ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி திட்டம்

1989–90 ல் இருந்து புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு பெறப்பட்ட கடன் தொகை ரூ.62,07,760/–ஆகும், மேற்படி கடன் தொகையில் பாக்கி இருந்த தொகை ரூ.51.95 லட்சம் டுபிட்கோவிடமிருந்து பெற்று ஐயுடிபிக்கு திரும்ப செலுத்தப்பட்டு உள்ளது.

## நகர்ப்புற வளர்ச்சி திட்டம் ( எம்.யு.டி.எப்)

இந்த திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன் தொகை ரூ.53,45,500 சென்ற ஆண்டு வரை ரூ.30.00 லட்சம் டுபிட்கோவில் பெற்று அசல் மற்றும் வட்டி செலுத்தப்பட்டு உள்ளது . 31–3–2011 முடிய அசல் மற்றும் வட்டி ரூ.4,76,512/– செலுத்தப்பட்டுள்ளது.

## சொத்தும் பொறுப்பும்

நகர்மன்றத்தின் பொறுப்பு கடன் இவைகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் ஆண்டுக்கணக்கில் கொடுக்கப்பட்டுள்ளது, 31–3–2011 ல் கொடுபடவேண்டிய நிலுவை. ஓய்வூதியதாரர்களின் நிலுவை . பணிக்கொடை ஆகியவை நிலுவை ஏதும் இல்லாது வழங்கப்பட்டுள்ளது, தணிக்கைக்காக பிடித்தம் செய்யப்பட்டது, அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி நிலுவை இந்த நிதியாண்டில் வழங்கப்பட்டுவிட்டது.

## வருவாய்

இந்த ஆண்டில் வரியினங்களின் வசூல் எதிர்பார்த்த அளவு சிறப்பான முறையில் சொத்து வரி Collectate Demand ல் 86.32 % வசூல் செய்யப்பட்டுள்ளது. (Overall Collection Arear 56%, Current=91%, Total- 86%)

**நிதிநிலைமை**

**2019–2020** பொதுவாக நிதிநிலைமை பற்றாக்குறையாகவே உள்ளது. நிதிநிலைமை ஓரளவு திருப்திகரமாக இருந்தாலும் இனிவரும் காலங்களில் நிதி பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்பு உள்ளது . எனவே வருவாயை பெருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**முடிவுரை**

**2019–2020**–ஆம் ஆண்டு சீர்காழி நகராட்சி மன்றத்தின் நிர்வாகம் திருப்திகரமாக இருந்தது . பொதுமக்களுக்கு செய்யப்பட வேண்டிய வசதிகள் தேவைக்கேற்ப உரிய முறையில் திருப்திகரமாக செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர். தஞ்சாவூர் அவர்களும் பொதுமக்களுக்கு செய்து கொடுக்க வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான திட்டப்பணிகளுக்குத் தேவையான நிதியுதவிகள் வழங்கியும் நகராட்சி நல்ல முறையில் செயல்படவும் ஒத்துழைப்பு கொடுத்து அறிவுறைகள் வழங்கி வருகிறார்கள். மேலும் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர். மற்றும் உறுப்பினர்கள் ஆலோசனையுடன் நகராட்சி அலுவலர்களின் முழு ஒத்துழைப்புடன் நகராட்சிகளின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு நிர்வாகப் பொறுப்புகளையும். கடமைகளையும் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டதற்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை பணிவுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**நகராட்சி அலுவலகம்.**
**சீர்காழி**

**ஆணையர்.**
**சீர்காழி நகராட்சி**